**கூட்டுறவு தேர்தல் மிகவும் அவசரம்**

ந.க.245/2013, CE-5(6) நாள். 16.03.2013

ஐயா,

பொருள்: தேர்தல் - கூட்டுறவுச்சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் – அறிவுரைகள் வழங்குதல் - மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர்- தொடர்பாக.

சில சமயங்களில், தேவை ஏற்படும் நேர்வுகளில், தேர்தல் அலுவலர்களுக்குப் பதிலாக மாற்றுத் தேர்தல் அலுவலர்களை (Alternative Election Officers) நியமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது போன்று, வாக்காளர் பட்டியல் அலுவலர்களைப் பொருத்தும், மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர்களை நியமிக்கலாமா? என்பது குறித்த சந்தேகம் மாவட்டத் தேர்தல் அலுவலர்களால் தொலைபேசிமூலமாகவும், அவர்களுக்கான பயிற்சியின் போதும் எழுப்பப்பட்டன.

2) விதி 52 (3) (b)-ன் கீழ் மாவட்டத் தேர்தல் அலுவலர், தேவைப்படும் நேர்வுகளில் மாற்றுத் தேர்தல் அலுவலரையோ அல்லது அலுவலர்களையோ நியமிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆயின், மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர் நியமனம் பற்றிக் கூறப்படவில்லை.

3) மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர் பற்றி விதிகளில் குறிப்பிடப்படாவிட்டாலும்:-

(அ) மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர் நியமிப்பதை விதி குறிப்பாக தடை செய்யவில்லை.

(ஆ) தேர்தல் அறிவிப்புச் செய்தபின், விதி எண் 52(18) (a) சொல்லப்பட்ட கலகம், வன்முறை, இயற்கைப் பேரிடர் போன்ற காரணங்களைத் தவிர்த்து வேறு எக்காரணம் கொண்டும் தேர்தல் நடவடிக்கைகள் நிறுத்தப்படக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கும் போது தேர்தல் அலுவலர், ஏதேனும் ஒரு காரணத்தினால் அவரது பணியைச் செய்ய இயலாவிடில், அதற்காக தேர்தல் நடத்துவது தடைபடக்கூடாது என்ற அடிப்படையில் அவருக்கு மாற்றாக அவரது பணியினைக் கவனிக்க மாற்றுத் தேர்தல் அலுவலர் நியமிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இதே நிலைப்பாடு வாக்காளர் பட்டியல் அலுவலருக்கும் பொருந்தும்.

(4) விதிகளில் மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலர் நியமனம் பற்றிக் குறிப்பாக (Specific) கூறப்படாவிட்டாலும், குறிப்பான தடை (Specific prohibition) ஏதும் இல்லாத நிலையில், ஆரம்பிக்கப்பட்ட சட்டபூர்வ தேர்தல் நடவடிக்கைகள் (Due process of election) தடையின்றி நடைபெறவேண்டும் என்ற சட்டநோக்கின் (intention of the legislature) படியும் மாற்று வாக்காளர் பட்டியல் அலுவலரை தேவையான நேர்வுகளில் நியமனம் செய்வதற்கு தடை ஏதும் இல்லை.

(ஒம்../-)ம.ரா.மோகன்
ஆணையர்

பெறுநர்:
மாநிலத் தேர்தல் அலுவலர்கள்.